*Chapter XXII Code of Criminal Procedure.)*

*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

**Case No.: CC. 455/2023, Date: 01.12.2025.**

**PW1 : திரு.செல்வராஜ் த.பெ முத்து**

துவக்க நேரம் 12.14 A.N

**சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) எதிரி சான்றுப்பொருளை பெயர், அடையாளம் தெரியாத கிடார் கிராமத்தை சேர்ந்த ஒரு நபரிடம் வாங்கியதாக சொல்லியுள்ள நிலையில், அந்த நபரை நான் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேனா என்றால் இல்லை.

2) தலைவாசல் காவல் நிலையத்திலிருந்து, சம்பவம் நடந்ததாக மாதிரி வரைபடத்தில் குறிப்பிட்ட இடம் எவ்வளவு தூரம் என்றால் 15 கி.மீ தூரம் இருக்கும். மாதிரி வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள சம்பவயிடமானது வனத்துறைக்கு சொந்தமான காப்புக்காடோ, வனத்துறைக்கு சொந்தமான இடமோ இல்லை என்றால் சரியல்ல, வனக்துறைக்கு சொந்தமானது, ஆனால் காவல் துறை கட்டுப்பாட்டிற்கு உட்பட்டது.

3) கைப்பற்றுதல் மகஜரில் மரப்பட்டின் நீளம் 42 செ.மீ என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். படிவம் 91ல் மரப்பட்டின் நீளம் 82 செ.மீ என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான், ஆனால் 42 செ.மீ தான் சரி. அந்த படிவம் 91ல் 8 என்ற எண் overwrite செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான்.

4) படிவம் 91 தயார் செய்யப்பட்டது, எதிரியை கைது செய்ததாக சொல்லும் தேதி 30.01.2022 தேதிதான் என்றால் சரிதான். படிவம் 91ல் சாட்சி கையொப்பம் என்ற இடத்தில் சாட்சிகள் யாரிடமும் கையெழுத்து பெறவில்லை என்றால் சரிதான். 30.01.2022ல் கைப்பற்றப்பட்டதாக சொல்லும் சான்றுப்பொருளை, 23.03.2022 ம் தேதிதான் நீதிமன்றத்திற்கு அனுப்பியதாக உள்ளது என்றால் சரிதான்.

5) 30.01.2022 ல் கைப்பற்றப்பட்டதாக சொல்லும் சான்றுப்பொருள், 23.03.2022 ம் தேதி நீதிமன்றத்திற்கு அனுப்பும் வரை யாருடைய வசம் அந்த சான்றுபொருள் இருந்தது என்று என்னால் குறிப்பிட்டு சொல்லமுடியுமா என்றால் நீதிமன்றத்தில் சான்று பொருளாக பதிவு செய்ய மனுத்தாக்கல் செய்யப்பட்டு, சான்று பொருள் குறிப்பேட்டில் பதிவு செய்யப்பட்டு, பின்னிட்டு காவல் நிலையத்தில் வைக்கப்பட்டிருந்தது.

6) எங்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில்தான் சென்றோமா என்றால் ஆமாம். சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்திற்கு அருகில் இருந்த தனிநபர் சாட்சிகள் எவரையும் நாங்கள் விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

7) நாங்கள் தகவல் கிடைத்தவுடன் எந்த பொருட்களையும், சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்திற்கு எடுத்துச்செல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல, மகஜர் Form–ன் பிரிண்ட் உடன் எடுத்துச்செல்லப்பட்டது. இவ்வழக்கில் கைப்பற்றுதல் மகஜர், படிவம் 91 ஆகியவை கணினியால் தட்டச்சு செய்யப்பட்டது என்றால் சரியல்ல, பிரிண்டட் படிவத்தில் என்னால் கையால் எழுதப்பட்டது.

8) மாதிரி வரைபடத்தில், குற்ற எண், சட்டப்பிரிவுகள் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். பொதுவாக காவல் நிலையாணையின்படி, ஒரு குற்ற வழக்கு தொடர்பாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த பின்னிட்டுதான், பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவேண்டும் என்றால் சரிதான். இந்த குற்ற வழக்கில் நாங்கள், காவல் நிலையத்திற்கு எதிரி மற்றும் வழக்கு சொத்துடன் நிலையம் வந்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யும் முன்பே, கைப்பற்றுதல் மகஜர் மற்றும் மாதிரி வரைபடம், பார்வை மகஜர் ஆகியவைகள் எங்களுடைய ஆவணங்களின்படி தயார் செய்யப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான்.

9) முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யாத நிலையில், சம்பவம் இடத்தில் தயார் செய்யப்பட்டதாக சொல்லப்படும் மாதிரி வரைபடத்தில் குற்ற எண்.47/2022, ச.பி 25(1)(A) of Arms Act என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதே போல சம்பவம் இடத்தில் தயார் செய்யப்பட்டதாக சொல்லப்படும் பார்வை மகஜரின் 4, 5 வது வரிகளில் குற்ற எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

10) இந்த வழக்கு சம்மந்தமாக சம்பவயிடமே செல்லாமல், இவ்வழக்கின் அனைத்து ஆவணங்களையும் காவல் நிலையத்தில் வைத்து எங்களால் தயார் செய்யப்பட்டு, சம்மந்தப்பட்ட சாட்சிகளை காவல் நிலையத்திற்கு வரவழைத்து, காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து பெற்றதால்தான் அதில் குற்ற எண் மற்றும் சட்டப்பிரிவு குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

11) நான் சொன்ன நேரத்தில், சொன்ன தேதியில் எதிரியை கைது செய்யவில்லை என்றும், எதிரியிடமிருந்து எந்த சான்றுப்பொருளையும் கைப்பற்றவுமில்லை என்றும், புள்ளிவிவர கணக்கிற்காக எதிரியின் மீது பொய்யாக வழக்கு பதிவு செய்து, அதற்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கும், இவ்வழக்குக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

முடிவு நேரம் 12.29 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2025.12.01 17:47:20 +0530

Judicial Magistrate No.2, Attur.